2011 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

39—

ஜவுளிச் சந்தை

***1250—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியில் ஜவுளிச் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் சாதாரணத் தொண்டனான எனக்கு 1989 முதல் 1998 வரை கழகத்தின் பல்வேறு பொறுப்புகளைத் தந்தும், 1998 முதல் 1999 வரை திருவள்ளூர் மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளராகப் பணியாற்றவும், 1999 முதல் தொடர்ந்து 12 ஆண்டுகளாக திருவள்ளூர் மாவட்ட புரட்சித் தலைவி அம்மா பேரவைச் செயலாளராகச் செயல்படவும், 2006 சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பளித்தும், மீண்டும் 2011—ல் திருவள்ளூர் தொகுதியில் போட்டியிட வைத்து, பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்தும், இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான கழக அரசில் (மேசையைத் தட்டும் ஒலி) கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சராகப் பணிபுரியவும் வாய்ப்பளித்த,* legendary, visionary, unparallelled and phenomenal leader *இதய தெய்வம் கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானு கோடி நன்றி மலர்களைப் பணிவுடன் சமர்ப்பித்து (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்குப் பதில் அளிக்க விழைகின்றேன்.*

விடை—

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதியில் தனியே ஒரு ஜவுளிச் சந்தை அமைக்க அப்பகுதி தொழில் முனைவோர்கள் எவரேனும் முன்வருவார்களாயின், அரசின் உதவியுடன் இப்பகுதியில் ஜவுளிச் சந்தை அமைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். நான் தினமும் வணங்குகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வீற்றிருக்கும் இந்த அவையில், அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.*

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு"

என்னும் வள்ளுவரின் வாக்குக்கேற்ப, அஞ்சாமை, நல்ல குடிப்பிறப்பு, மக்களைப் பாதுகாக்கும் திறன், நூல்களைக் கற்றறிந்த அறிவு, விடாமுயற்சி இந்த ஐந்தும் இருந்தால்தான் அவர் நல்ல முதலமைச்சர். இந்தியத் துணைக் கண்டத்தில் இப்பண்புகளை ஒருசேரப் பெற்ற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் ஒருவரே ஒன்றரைக் கோடி கழக உறுப்பினர்களின் குல தெய்வம். 7 கோடி மக்களின் நலன் கருதி தனது இன்னுயிரையும் துச்சமென எண்ணி இரவு பகல் பாராமல் பணியாற்றி, தீய சக்திகளை விரட்டியடித்து, மூன்றாம் முறையாகத் தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்றும், (மேசையைத் தட்டும் ஒலி) இப்பூலோகத்தில் யாருடைய எண்ணத்திலும் உதித்திராத திட்டமான தொட்டில் குழந்தைத் திட்டத்தை உருவாக்கியும், மழைநீர் சேகரிப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டமே உற்றுநோக்குகின்ற வகையில் சவாலான ஒரு நிதிநிலை அறிக்கையினைச் சாமர்த்தியமாகத் தயாரித்துத் தாக்கல் செய்தும், (மேசையைத் தட்டும் ஒலி) டாலர் சிட்டியான திருப்பூருக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக 200 கோடி ரூபாய் வட்டியில்லாக் கடனாக வழங்கியும், துணிகளுக்கான 5 சதவிகித வரி நீக்கம் செய்தும், (மேசையைத்

2011 ஆகஸ்ட் 16]

தட்டும் ஒலி) வங்கக் கடலோரத்தில் துயில் கொண்டிருக்கின்ற தங்க நிற மேனி தலைவனின் ஒரே அரசியல் வாரிசாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) 7 கோடி மக்களின் மனதில் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் எங்களின் காவல் தெய்வமே, (மேசையைத் தட்டும் ஒலி) பல்லடம்–கவுண்டம்பாளையம் என்னும் சிற்றூரில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை கிளைக் கழகத்தின் பொருளாளராகவும், கிளைக் கழகத்தின் பிரதிநிதியாகவும், ஒன்றியக் கழகப் பிரதிநிதியாகவும் தொடர்ந்து 19 ஆண்டுக்காலம் ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளராகவும், மூன்று முறை கணபதிபாளையம் கூட்டுறவுச் சங்கத்திலே பதவிகளை அளித்தும், இரண்டு முறை கணபதிபாளையம் ஊராட்சி மன்றத்திலே பதவிகளை அளித்தும், 3 முறை பல்லடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே பணியாற்ற வைத்தும், தமிழகத்தினுடைய புகழ்பெற்ற கோயில்களில் ஒன்றான அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் அறங்காவலர் குழுவின் தலைவராகப் பணியாற்ற வைத்தும், 3 முறை பாசன விவசாயிகள் சங்கத்தின் தலைவராகப் பணியாற்ற வைத்தும், பல்லடம் தாலுகா மாசுக் கட்டுப்பாட்டு வாரிய உறுப்பினராகப் பணியாற்ற வைத்தும், பல்லடம் அரசு மருத்துவமனை நோயாளிகள் சங்கத்திலே இரண்டு முறை பணியாற்ற வாய்ப்பளித்தும், பல்லடம் தாலுகா விவசாயிகள் ஆலோசனைக் கமிட்டியின் தலைவராகப் பணியாற்ற வைத்தும், மொத்தம் 16 அரசுப் பதவிகளை அளித்து, இவற்றுக்கெல்லாம் மேலாக பல்லடம் சட்டமன்ற வேட்பாளராக என்னை அடையாளம் காட்டி, தமிழகத்திலேயே இரண்டாவது அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) பல்லடம் தொகுதி, கழகத்தின் எஃகு கோட்டை மட்டுமல்ல, வைர மற்றும் வைடூரியக் கோட்டை என்பதை நிரூபித்து, சாதாரணத் தொண்டனும் சட்டமன்ற உறுப்பினராகலாம் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது கோடானுகோடி நன்றியினை அவர்களுடைய பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

முற்பகல் 10–55

எனது வெற்றிக்காகப் பாடுபட்டு, வாழ்ந்தாலும், வீழ்ந்தாலும் பதவிகள் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தங்களின் உயிரினைப் பணயம் வைத்து மாண்புமிகு அம்மா அவர்களை முதலமைச்சராக அமர்த்த வேண்டுமென்ற ஒரே குறிக்கோளோடு (மேசையைத் தட்டும் ஒலி) செயல்படுகின்ற பல்லடம் தொகுதி,

இரத்தத்தின் இரத்தமான கழக உடன்பிறப்புகள் அனைவரின் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு அம்மா அவர்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

பல்லடம் தொகுதியிலே வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும், கூட்டணிக் கட்சியின் தலைவர்களுக்கும் மற்றும் தொண்டர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியினைச் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம். கேள்விக்கு வாருங்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: வந்துவிடுகிறேன். மாண்புமிகு அம்மா, பல்லடம் சட்டமன்றத் தொகுதியில்தான் அதிகமான விசைத்தறிகள் இயங்கி வருகின்றன. 1994 ஆம் ஆண்டு விசைத்தறித் தொழிலானது கடுமையான நெருக்கடியினைச் சந்தித்தபொழுது, தொழிற்சாலை பிரிவு Tariff IV–லிருந்து சிறுதொழிலுக்கான Tariff III–A என்ற ஒன்றை ஏற்படுத்தி அதன்மூலம் ஆண்டுக்கு 12 கோடி ரூபாய் சலுகையைக் காட்டியும், 2002 ஆம் ஆண்டு Tariff III–A (2) என்ற ஒன்றை ஏற்படுத்தி ஆண்டுக்கு 9 கோடி ரூபாய் சலுகை அளித்தும், மீண்டும், 2005 ஆம் ஆண்டு ரூபாய் 36 கோடி ரூபாய் மின் கட்டணச் சலுகை அளித்தும், தொழிலையும், தொழில் சார்ந்தவர்களையும் மாண்புமிகு அம்மா அவர்கள் காப்பாற்றினீர்கள். இதற்கு நன்றியினை அவர்களும் ஒவ்வொரு தேர்தலிலும் வாக்குச் சீட்டின்மூலம் தெரிவித்து வருகிறார்கள். தமிழகத்தில் இயங்கி வருகின்ற விசைத்தறித் தொழிற்கூடங்கள் பாதிக்கு மேல் திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. இங்கு விசைத்தறி உரிமையாளர்கள் சுமார் 20,000 பேர் உள்ளனர். 90 சதவிகிதம் பேர் கூலி அடிப்படையில் தொழில் செய்து வருகிறார்கள். விசைத்தறிகள்மூலம் கிரே காடா துணியானது நாளொன்றுக்கு சுமார் 2 கோடி மீட்டர் தயாரிக்கப்படுகின்றது. இவை அனைத்தும் இடைத்தரகர்கள்மூலம் வட மாநிலங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதற்கென நாளொன்றுக்கு கமிஷனாக சுமார் 1 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. கடந்த 20 ஆண்டுக்காலமாக விசைத்தறிக்கென ஒரு வாரியம் வேண்டுமென்று தொழில் செய்பவர்களால் கோரிக்கை வைக்கப்பட்டு வருகின்றது. இக்கோரிக்கையினை மாண்புமிகு அம்மா அவர்கள் தயவுகூர்ந்து கனிவுடன் பரிசீலித்து தனி வாரியம் அமைத்து, விசைத்தறித் தொழிலுக்கு மறுவாழ்வு அளிக்குமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

2011 ஆகஸ்ட் 16]

கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசில் மின்வெட்டுத் துறை அமைச்சர் . . . (குறுக்கீடு) முழுமையாக விசைத்தறித் தொழிலாளர்கள் பயன்படுகின்ற வகையில் பல்லடத்தை மையமாகக் கொண்டு ஜவுளிச் சந்தை ஒன்றை ஏற்படுத்தினால் இந்தத் தொழிலைச் சார்ந்த அனைவரும் பயனடைவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம்*, *இன்னும் 3 கேள்விகளுக்கு நான் போக வேண்டும். சீக்கிரம் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு அம்மா அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் இந்தியாவிலேயே முதல் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காவை அமைத்து, 4.87 கோடி ரூபாய் மானியமாக அளித்துள்ளீர்கள். இந்தப் பூங்காவுக்கு அருகில் சுமார் 2 ஏக்கர் அரசு நிலம் உள்ளது. இதில் ஜவுளிச் சந்தை அமைக்க ஆவன செய்யுமாறு தங்களை சிரந்தாழ்த்தி, கரங்கூப்பிக் கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு அம்மா. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள், துணைக் கேள்வி கேளுங்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஜவுளிச் சந்தை அமைக்க வாய்ப்பிருக்கிறதா என்பதைக் கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகின்றது. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், பல்லடம் பகுதியிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரை முதலமைச்சராக இருந்தபோது, பிப்ரவரி 2005–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒரு உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா ரூபாய் 55.42 கோடி மதிப்பீட்டிலும், 26.07 கோடி ரூபாய் அரசு மானியத்துடன் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பூங்காவின்மூலம் சுமார் ரூபாய் 160 கோடி அளவிலான தொழில் முதலீடும், ஆண்டொன்றுக்கு சுமார் ரூபாய் 300 கோடி*

மதிப்பிலான ஜவுளி வர்த்தகமும், சுமார் 6,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

பணிமனை

***421—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், காட்டுமன்னார்கோவிலில் போக்குவரத்துப் பணிமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், காட்டுமன்னார்கோவிலில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க, மேற்படி வட்டம், உடையார்குடி கிராமத்தில் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தமான மொத்த இடத்தின் ஒரு பகுதியில், அதாவது 2.00 ஏக்கர் நிலம், வக்ஃபு வாரியத்தின்மூலம் அணுகுபாதை ஏற்படுத்தி நிலம் ஒப்படைப்புச் செய்யப்பட்டவுடன் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளல் பேகன், வான்புகழ் பாரி, வல்வில் ஓரி,*